reclaim and the number of irrigation tanks that the Government have actually taken up for reclamation and commenced work? These tanks are most important to agriculturists next only to Major irrigation sources. If the Minister has not got the exact figures, will he at least give rough figures?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முப்பதாயிரம் குளங்கள் என்கிற அளவிலே மொத்தக் கணக்குச் சொல்லலாம். கேட்கப்படுகிற கேள்வி டி.சி.ஆர். பற்றிக் கேட்கப்பட்டிருப்பதால் பதில் அளிப்பதற்கான விவரங்களை நான் பெற்றிருக்கவில்லை.

Bridge across Kusasthali River

* 183 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government propose to construct an over bridge or causeway over Kusasthali river flowing between Kanakammachatram and Thiruvalangadu in Thiruttani taluk ; and

(*b*) if so, the estimated cost of the scheme?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி— (அ) தற்போதைக்கு அவ்விதமான திட்டமொன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : சார், திருத்தணி தாலுக்காவில் கனகம்மா சத்திரத்துக்கும் திருவாலங்காட்டுக்கும் தூரம் 5 மைல். அதன் குறுக்கே
மு. ப. 9–30 இந்த நதி இருப்பதால்தான் போக முடியவில்லை. பஸ்கள் போக முடிவது இல்லை, கார்கள் போகமுடிவது இல்லை. மக்கள் நடந்துதான் போக வேண்டிய நிலை இருப்பதால், திருவாலங்காட்டுக்குப் போகவேண்டும் என்றால் திருவள்ளூர் என்ற தாலுக்காவிற்குப் போய்த்தான் இங்கு வர வேண்டும். இதற்கு 20 மைல் தூரம் ஆகிறது. இந்தக் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் இப்போது ஏதாவது அதற்காக எஸ்டிமேட் தயார் செய்யுமா ? முந்தைய அரசு எஸ்டிமேட் தயார்செய்து 15 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லிக் கொஞ்சம் அதிகமாய் இருக்கிறது என்று விட்டு விட்டார்கள். இந்த அரசு அதைப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 15 லட்சம் அல்ல 23 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஊடுபாலம் ஆக கட்டுவது என்றால் 12 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் நான்காவது திட்டத்திற்கு மொத்தம் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறக்குறைய 23 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிற நிலையில், இந்த 23 லட்சம் ரூபாய் செலவு நமக்கு இந்த நேரத்தில் கட்டி வருமா என்ற நிலையில் அதைப்பற்றி யோசித்துக் கொண்டு வருகிறோம். ஊடுபாலம் அமைப்பதுபற்றிச் சொன்னார்கள். அதைக் கட்டும் அளவுக்கு அங்குள்ள மக்கள் சம்மதம் தருவார்களானால், அது அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று கூறுவார்களானால், அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. கே. விநாயகம் : இந்த ஓவர் பிரிட்ஜ் கட்டுவதற்குக் கொஞ்சம் அதிகம் செலவாகலாம் என்பதால் ஊடுபாலம் கட்டலாமென்று சொல்கிறார்கள், அதற்கு மக்கள் அனுமதி தரவேண்டும் என்ற நிபந்தனை எங்கு இருக்கிறது ? அதுமாதிரி விதிகள் ஏதாவது இருக்கிறதா ? அது என் தொகுதியில் இல்லை, அவர்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தொகுதியில்தான் உள்ளது. ஆகவே, பொலிடிகல் டிஸ்கிரிமினேஷன் வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

1968 மார்ச் 9]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. விநாயகம் அவர்கள் கேள்வி நேரத்தில் கடைபிடிக்கவேண்டும் என்று சொல்கிற மரபுக்கு முற்றிலும் முரண்பட்டது இது. திருத்தணி தொகுதி ஆக இருந்தால் விநாயகர் காப்பு என்ற அளவில் நிறைவேற்றி இருப்போம். ஊடுபாலம் கட்ட மக்கள் அனுமதி தரவேண்டும் என்ற விதி இல்லை. அது திருப்தி அளிக்கவில்லை என்ற முறையீடு வருமே என்ற கவலையில்தான் சொன்னேன். வேறு இல்லை.

Poramboke lands

* 184 *Q.*—Thiru S. RAMACHANDRAN : **Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is a proposal to lease out the poramboke lands instead of assigning them as at present?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : சர்க்கார் நிலங்களை ஒப்படைவுசெய்து விடுவதால் பிறகு சர்க்கார் பொதுக் காரியங்களுக்கு அந்த நிலங்களை மேற்கொள்கிறபோது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை அல்லது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று குத்தகை அல்லது ஏலம் ஆகிய அடிப்படையில் ஏதாவது செய்வதற்கு யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சில நிலங்கள் ஒப்படைவு செய்யப்படுகின்றன, சில நிலங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன. அந்தந்த நிலத்தின் இயல்பு என்னென்ன காரியங்கள் செய்வதற்காக எந்த உபயோகத்திற்காகக் கேட்கிறார்கள். அவை அரசாங்கத்துக்கோ அல்லது ஸ்தலஸ்தாபன நிறுவனங்களுக்கோ இவற்றுக்குத் தேவையாக இருக்கிறதா என்று இவற்றை எல்லாம் ஆராய்ச்சி செய்து அந்த அடிப்படையில் சில நிலங்கள் அஸைன் செய்யப்படுகிறது, சில நிலங்கள் லீஸ் செய்யப்படுகிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1965–66, 1966–67 இந்தப் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்வதில் ஏற்கனவே சில பல கேடுபாடுகள் நிகழ்ந்து இருப்பதால், இனிமேலாவது ஏழை ஹரிஜனங்களுக்கும் நிலம் இல்லாத ஏழைகளுக்கும் பட்டா செய்துகொடுக்கும்போது சில விதி முறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே உள்ள நிலைமைகளை எல்லாம் மாற்றி, தமிழகத்தில் இந்த மாதிரியான புறம்போக்கு நிலங்கள் துரிதமாகப் பல இடங்களில் நிலம் அற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். சமீபத்தில்கூட அவர் தலைமையில்தான் வருவாய்த் துறை அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் பட்டா வழங்கியதையும் அவர்கள் அறிவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : விவசாயம் செய்யும் நிலங்களை ஜாரி செய்வதில் விதிமுறைகள் கெடுபிடியாக இருந்தாலும் குடி இருக்கக் கூடிய வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்காவது உடனடியாக, விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டிருந்தாலும் சரி, அதை அவர்களுக்குப்பட்டா வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புது அரசு வந்ததற்குப் பிறகு பட்டா வழங்குகிற முறையில் சில மாறுதல்களைச் செய்திருக்கிறோம். இன்னும் நல்ல தீவிரமான மாறுதல்களைப் புகுத்தும் ஆலோசனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்கரோச்மெண்ட் செய்திருக்கிறார்களென்றால் அன் அப்ஜக்ஷனபில் என்க்ரோச்மெண்டை பொறுத்த வரையில் கூடுமானவரை அவர்களுக்குப் பட்டா செய்ய வேண்டும் என்பதற்காக மாவட்ட கலெக்டர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் இவர்களுக்கு தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டு பல்வேறு மாவட்டங்களில் உரிமம் வழங்குகிற செயல் வேகமாகத் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.